**முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.**
**அ.வ.எண். 145/2017**

2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 08 ம் நாள் புதன்கிழமை.
இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10 வது விதி 4 ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

பி.சா.1. செல்வி. கல்யாணி.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. பி.சா.ஆ. 25 முதல் 32 ஆவணங்களை பற்றி எனது எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்று எனக்கு தெரியவில்லை. மேற்படி ஆவணங்களை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. மேற்படி ஆவணங்கள் வழக்கிற்கு தேவையற்றவை என்றால் எனக்கு தெரியவில்லை. மேற்படி ஆவணங்கள் எனக்கு சம்மந்தப்பட்டவை அல்ல. பி.சா.ஆ.33, 34 வழக்குகள் எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் அந்த வழக்கு சொத்தை ஜேம்ஸ் பீட்டர் என்பர் தவறாக 3 ம் நபருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார். அந்த வழக்கில் என்னை தவறாக சேர்த்துவிட்டார். அந்த கிரையத்திற்கும் எனக்கும் தொடர்பில்லை. பி.சா.ஆ.33, 34 தொடர்புடைய வழக்கை நான் எடுத்து நடத்தவில்லை. எனக்கு சரியாக நினைவில் இல்லை. பி.சா.ஆ.33 முதல் 35 ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்ய யார் கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. எனது வழக்கறிஞருக்குதான் தெரியும்.

பி.சா.ஆ.36 முதல் 38 வரையான வழக்குகள் நிலுவையில் இல்லை என்றால் சரிதான். அந்த வழக்குகளை ஜேம்ஸ் பீட்டர திரும்ப பெற்றுக்கொண்டார். பி.சா.ஆ.36 முதல் 38 தொடர்பான வழக்குகளை ஜேம்ஸ் பீட்டர் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்தார். பி.சா.ஆ. 39 உத்தரவு பற்றி எனக்கு தெரியும். உரிமையியல் நீதிமன்றத்தில் தான் தீர்மானிக்க வேண்டும் என்று கூறி மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை.

2. பி.சா.ஆ.40, 41 க்கும் இந்த வழக்கிற்கும் சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்களில் சர்வே எண்கள் 190/1 மற்றும் 190/3 அரசு புறம்போக்கு என்று உள்ளது. இந்த வழக்கின் சொத்தின் சர்வே எண்கள் 192/3 மற்றும் 192/4. மேற்படி ஆவணங்களில் உள்ள சொத்துக்களும் இந்த வழக்கு சொத்துக்களும் வெவ்வேறானவை என்றால் சரிதான். 190/1 மற்றும் 190/3 சர்வே எண்களில் உள்ள சொத்தை இந்த வழக்கின் வாதி ஆக்கிரமித்துள்ளதாக அதை அகற்ற கோரி பி.சா.ஆ.40 மற்றும் 41 ல் உள்ள வழக்கை தாக்கல் செய்தோம். பி.சா.ஆ.41ல் சர்வே எண் 190/1 மற்றும் 190/3 சொத்துக்களை யாரும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றும் முட்புதர்களாக உள்ளது என்றும் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். பி.சா.ஆ.40 மற்றும் 41 வழக்கிற்கு பிந்தைய ஆவணங்கள் என்றால் சரிதான்.

3. எனக்கும் வாதிக்கும் இந்த வழக்கு நடப்பதாதால்தான் பி.சா.ஆ.40ல் உள்ள வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் கட்டிடம் எதுவும் இல்லை. ஒரு கண்டைனர் அறை பாதுகாவலருக்காக போடப்பட்டுள்ளது. மேற்படி விவரத்தை எனது

பதிலுரையிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை. பி.சா.ஆ.42 ஆவணத்தை கம்பெனி சார்பாக யார் வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. பி.சா.ஆ.42 ல் கட்டிடம் எதுவும் இருப்பதாக காண்பிக்கப்படவில்லை. வழக்கு சொத்தில் சென்னை மாநகராட்சியின் குடிநீர் இணைப்பும் கழிவுநீர் இணைப்பும் இல்லை. பி.சா.ஆ.42 ஆவணத்தை நான் மோசடியாக வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.42 ஆவணம் வழக்கிற்கு பின்னர் வாங்கப்பட்டது என்றால் சரிதான். பி.சா.ஆ. 43 மற்றும் 44 ஆவணங்களை நான் வழக்கிற்காக மோசடியாக பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. மாநகராட்சி அதிகாரிகள் குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரிய அதிகாரிகள் வழக்கு சொத்திற்கு வந்துள்ளார்கள். நான் வழக்கு சொத்திற்கு குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு கேட்டு மாநகராட்சிக்கு மனு கொடுத்துள்ளேனா என்று ஞாபகம் இல்லை. என்னிடம் அவ்வாறு மனு எதுவும் உள்ளதா என்று ஞாபகம் இல்லை. அவ்வாறு மனு கொடுத்ததாக நான் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. பி.சா.ஆ.45 ஐ எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்று எனக்க தெரியவில்லை. சென்னையில் ஹர்பன் லாண்ட் டாக்ஸ் ஆக்ட் ரத்து செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியும். பி.சா.ஆ. 46 வழக்கிற்காக மோசடியாக பெறப்பட்டது என்றால் சரியல்ல. சென்னை மாநகராட்சியாக மாறிய வரை ஹர்பன் டாக்ஸ் வசூலிக்கப்பட்டது. பி.சா.ஆ.46 ல் வட்டாட்சியரின் முத்திரை இல்லை. பி.சா.ஆ.46 யாரால் வழங்கப்பட்டது என்ற விவரம் அதில் இல்லை. பி.சா.ஆ.46 ஆவணம் 2007 ம் ஆண்டு கொடுக்கப்பட்டது என்று நான் வழக்கில் கூறியுள்ளேனா என்று

தெரியவில்லை. நான் இந்த வழக்கில் பதிலுரை தாக்கல் செய்த பிறகு பி.சா.ஆ.46 ஆவணத்தை பொய்யாக வாங்கியுள்ளேனா என்றால் சரியல்ல. பி.சா.ஆ.47 நான் தாக்கல் செய்த பிழைத்திருத்தல் பத்திரத்தின் படி வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.48 ஆவணத்தை நான்தான் வாங்கினேன் என்றால் சரிதான். பி.சா.ஆ.48 ல் பட்டா சொத்து வரி வாதி பெயரில் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது. அவர் பெயரில் இருந்து பி.சா.ஆ.47 ஆவணம் மூலமாக எனது பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.46 ஆவணம் மோசடியான ஆவணம். பி.சா.ஆ.46 ஆவணத்தில் மோசடியான ஆவணம் என்று குறிப்பு எதுவும் இல்லை. பி.சா.ஆ.47 ல் எனது பெயரில் பட்டா வாங்கியதற்கான உத்தரவை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன்.

**வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி.